முருகப்பெருமான் துணை

**மகான் பிங்களமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.12.2022**, சனிக்கிழமை

1. மனமாயை வென்று மீண்டிட
மக்களை நோக்கி அருளுகின்ற
ஞானதேசிகன் சன்மார்க்க வழியை
நம்பகம் வைத்து மக்கள் வர
2. வருகவே வையகம் மாறுமென
வழிமொழிந்து அனுகூல ஆசிதனை
பெருமைபட சுபகிருது சிலை திங்கள்
புகலுவேன் நவதிகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் **09** ம் நாள் **24.12.2022**, சனிக்கிழமை)
3. வாரமதில் பிங்களமுனிவர் யானும்
வழங்குவேன் உலகோர் ஞானம்பெற
சோரமின்றி சன்மார்க்க வழியை
சுத்தமுற ஏற்று மக்களெல்லாம்
4. மக்களெல்லம் ஞானிகள் பேரில்
மாதாந்திர முழுமதி பூசை கலந்து
தேக்கமின்றி பிரணவகுடில் நோக்கி
தொடர்ந்து மக்களெல்லாம் வர
5. வருகவே அரங்கமகா ஞானியின்
வல்லமையான ஆசி பலம் வழி
தருமம் செய்யும் சிந்தையும்
தரணி காக்கும் ஆற்றலும் கூடி
6. கூடியே மக்களிடை இந்த சக்தி
குருவரங்கன் மகா சக்தியாகப் பரவி
நாடெங்கிலும் புரட்சி ஞானவழி
ஞானஆட்சி அமைக்கும் வண்ணமாக
7. ஆகவே மனிதர்கள் ஆட்சியை
அய்யமற முடிவிற்கு கொண்டுவர
வகையான தேற்றமும் மாற்றமும்
வரலாறு காணாத வண்ணம்
8. வண்ணமுடன் மக்களிடை தெளிவு
வளர்ச்சிப் பாதையாக மாறி
எண்ணம் தூய்மைபட மக்களிடை
எதார்த்தம் இயல்பு குணங்களாகி
9. ஆகியே சேவை நோக்கில்
ஆபத்தான சுயநலம் போக்கி
மகிழவே மக்கள் அனைவரையும்
மதிக்கின்ற நேசிக்கின்ற நிலை ஆகி

10. ஆகியே சகலத் துன்பங்களையும்
அகற்றி பிறர் தொண்டதனை
வகைபட மதித்துப் போற்றி
வணங்கி அங்கீகாரம் தரும்படி

11. தரும்படி தயவான மக்களாகி
தவதரும பலம் பெருக்கி
வரும் உலகில் ஞான உலகம் படைப்பர்
வழங்கிய அனுகூல ஆசிமுற்றே

—சுபம்—